# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கல்விப்பீடம்

## கல்விமாணிக் கற்கைநெறி பகுதி III 2017/2018

### SAE 410 கல்வியின் விசேட துறைகள்

**நேரம் : 3 மணித்தியாலங்கள்**

---

- நீங்கள் கற்ற இரண்டு துறைகளைத் தெரிவு செய்க.
- இவ் இரண்டு துறைகளிலுமிருந்தும் முதலாம் வினாவுக்கும் ஏனைய இரண்டு வினாக்களுக்கும் விடையளிப்பதனூடாக எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.
- ஒவ்வொரு துறைக்குமுரிய விடைகள் தனித்தனியாக வெவ்வேறு விடைப்புத்தகங்களில் எழுதப்படுதல் வேண்டும்.
- தெரிவுசெய்த துறைக்குரிய பெயரினை விடைதாளின் வலதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதுக.

## <u>கல்வித் திட்டமிடல்</u>

### பகுதி I

1.

i. கல்வித் திட்டமிடல் என்றால் என்ன என்பதனை ஏற்றுக்கெகாள்ளத்தக்க வரைவிலக்கணம் தந்து விளக்குக

(04 புள்ளிகள்)

ii. நுண்பாக கல்வித் திட்டமிடல் மற்றும் பெரும்பாக கல்வித் திட்டமிடல் என்பவற்றைச் சுருக்கமாக விளக்குக

(04 புள்ளிகள்)

iii. பாடசாலைப் படமாக்கலின் (School Mapping) நோக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக

(04 புள்ளிகள்)

iv. கல்வித் திட்டமிடலில் மேற்பார்வையின் (Monitoring) முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக

(04 புள்ளிகள்)

v. கல்வித் திட்டமிடற் செயன்முறையில் நவீன தொழில்நுட்ப உபாயங்கள் பயன்படுத்தப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் நான்கினைக் குறிப்பிடுக

(04 ள்ளிகள்)

## பகுதி II

2.i பாடசாலைத் தகவல்களை இனங்காண்பதற்குப் பயன்படுத்தக்கூடிய உபாயங்கள் இரண்டினை விளக்குக.

(05 புள்ளிகள்)

ii பாடசாலைத் திட்டமிடலில் கல்விமுகாமைத்துவ தகவல் முறைமையின் (EMIS) முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக

(10 புள்ளிகள்)

3.i கல்வித் திட்டமிடல் செயன்முறையில் உள்வாரி மற்றும் வெளிவாரி (Internal and External) வினைத்திறன்களின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii உள்ளவாரி வினைத்திறன் மற்றும் வெளிவாரி வினைத்திறன் என்பன எவ்வாறு அளவிடப்படலாம் என்பதனை விளக்குக.

(05 புள்ளிகள்)

iii ‘இலங்கையின் கல்விமுறையில் நிலவும் கல்விவிரயங்கள் மேற்படி கூற்றினை உதாரணங்கள் தந்து விளக்குக.

(06 புள்ளிகள்)

4. i உபாயத்திட்டமிடல் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii ஒரு பிரச்சினையை இனங்காண்பதற்கு பாடசாலை அதிபர் ‘பிரச்சினை மரம்’ அணுகுமுறையை ( Problem Tree) எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக.

(05 புள்ளிகள்)

iii உபாயத் திட்டமிடலின் பலமான அம்சங்கள் எவையென்பதை உதாரணங்கள் தந்து விளக்குக.

(06 புள்ளிகள்)

5.i கல்வித் திட்டமிடலில் சமூகக் கேள்வி அணுகுமுறை (Social Demand approach) மற்றும் மனிதவலு அணுகுமுறை (Man Power approach) என்பவற்றைச் சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

ii மனிதவலு அணுகுமுறையைப் பயன்படுத்தி கல்வியைத் திட்டமிடும்போது இலங்கையானது முகங்கொடுக்கும் சவால்களை உதாரணங்கள் தந்து விளக்குக.

(08 புள்ளிகள்)

## கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும்

### பகுதி I

(1)

i. ஆலோசனை அமர்வொன்றுக்கு ஆலோசனைநாடியை அனுமதிப்பதில் கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் இரண்டு குறிப்பிடுக.

ii. மறைமுகமான மௌனத்தைக்கலைத்தலுக்கு உதாரணம் ஒன்று தருக.

iii. பொழிப்புக்கூறுதல் என்பதை கருத்துரைக்குக

iv. ஒரு ஆலோசனை அமர்வொன்றில் சுருக்கம்கூறுதல் நடைபெறும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

v. ஆலோசனையில் திறந்த வினாக்களை வினவுவதன் அனுகூலங்கள் இரண்டு தருக.

vi. குழு ஆலோசனை என்பதால் கருதப்படுவது யாது?

vii. ஆலோசனையில் எளிய தளர்ச்சியின் முக்கியத்துவத்தினை சுருக்கமாக முன்வைக்குக.

viii. ஆலோசனையில் பின்தொடர் அமர்வுகளின் நோக்கங்கள் இரண்டு எழுதுக.

ix. ஆலோசனைநாடியின் பிரச்சினையைப் பகுப்பாய்வு செய்கையில் கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் இரண்டு குறிப்பிடுக.

x. ஆலோசனை அமர்வொன்றினை தயார்படுத்துகையில் ஒரு ஆலோசகரால் கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் இரண்டு தருக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

## பகுதி II

(2) i. ஆலோசனை அமர்வொன்றின் வினைத்திறனை அதிகரிப்பதில் கவனித்தல் திறன்களின் (attending skills) முக்கியத்துவத்தினை விபரிக்குக.

(07 புள்ளிகள்)

ii. ஆலோசகருக்கும் ஆலோசனைநாடிக்கும் இடையிலான சிறந்த தொடர்பினை கட்டியெழுப்புவதற்கு உன்னிப்பான செவிமடுத்தல் (active listening) பயன்படுமாற்றை விளக்குக.

(08 ள்ளிகள்)

(3) i. கீழே தரப்பட்டுள்ள கூற்றுகள் இரண்டும் இரு ஆலோசனைநாடிகளிடமிருந்து பெற்ற துலங்கல்களாகும். இவற்றினை பொழிப்பாக்குக.

ஆலோசனைநாடி 1: "நான் எனது பெற்றோரை வெறுக்கிறேன். அவர்கள் என்மீது அன்பு காட்டுவதில்லை. எனது சகோதரன் எப்போதும் என்னுடன் சண்டையிட்டுக்கொண்டிருப்பான். ஆனாலும் பெற்றோர் என்னையே குறை கூறிக்கொண்டிருப்பர். அவர்கள் எந்தநாளும் அதிக பொருட்களை எனது சகோதரனுக்கு வாங்கிக் கொடுக்கின்றனர். என்னை அவர்கள் மாற்றானதாய்பிள்ளை போன்றே வளர்க்கின்றனர். இப்போது எனக்கு வாழ்க்கையே சலித்துவிட்டது. எனது சகோதரனையும் நான் வெறுக்கிறேன்."

ஆலோசனைநாடி 2: "எனக்கு ஒரு தொழிலும் உருப்படியாக அமையவில்லை. நான் ஒவ்வொரு தொழிலாக மாறிக்கொண்டிருக்கின்றேன். இது மிகவும் கடினமானதாகவுள்ளது. எனக்கு ஒரே மாதிரியான வேலையில் நிலைத்திருப்பதோ அல்லது தொடர்ந்து வேலை செய்வதோ இயலாத காரியமாகும்."

(07 புள்ளிகள்)

ii. ஆலோசனையில் ஒத்துணர்வுடன் துலங்குதலை உதாரணங்களின் உதவியுடன் விளக்குக.

(08 ள்ளிகள்)

(4) i. பாடசாலையில் மாணவர்களுக்கு பயன்படுத்தக்கூடிய தொழில் வழிகாட்டல் நுட்பங்களை உதாரணங்களின் உதவியுடன் விளக்குக.

(07 புள்ளிகள்)

ii. க.பொ.த (உ/த) த்துக்கு தம்மைத் தயார்படுத்தும் மாணவர்களுக்கு பயன்படுத்தக்கூடிய நான்கு கல்விவழிகாட்டல் நுட்பங்களை உதாரணங்களின் உதவியுடன் விளக்குக.

(08 ள்ளிகள்)

(5) i. பாடசாலை ஆலோசகரால் பயன்படுத்தக்கூடிய நான்கு வகையான குழு ஆலோசனைகளையும்பற்றி விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. ஆலோசனை அமர்வொன்றில் முடிவுக்கு கொண்டுவருதலை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதை பொருத்தமான உதாரணங்களின்மூலம் விளக்குக.

(07 புள்ளிகள்)

xxxxxxxxxxxxxxx